மின் அஞ்சல்

சுற்றறிக்கை

ந.க.எண். 9424/2010/எச் 1 நாள் 15-04-2010

பார்வை: பணிக்குழு – நகராட்சிகள் பொதுப்பிரிவிலுள்ள தற்காலிகப் பணியிடங்கள் நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி வேண்டுதல்– காலதாமதத்தை தவிர்ப்பது – தொடர்பாக.

*********

நகராட்சிகளில் பொதுப்பிரிவிலுள்ள தற்காலிகப்பணியிடங்களுக்கு பணியிட நீடிப்பு ஆணை கேட்டு மிகவும் காலதாமதமாக பிரேரணைகள் வரப்பெறு கின்றன. இவ்வலுவலகத்திலிருந்து பணியிட நீடிப்பு ஆணை வழங்கப்படும் பொழுதெல்லாம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில் " இனிவரும் காலங்களில் கால நீடிப்பு வழங்கக்கோரும் பிரேரணையை காலம் முடிவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பாகவே அனுப்பி உரிய ஆணை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது." இருப்பினும் பெரும்பாலான நகராட்சிகளில் 10,12, வருடங்களுக்கு மேலாக பணி நீடிப்பு ஆணை பெறப்படாமல் தற்பொழுது பணி நீடிப்பு கேட்டு உரிய ஆவணங்களின்றி பிரேரணைகள் அனுப்பி வைக்கப் படுகின்றன.

எனவே, இனிவரும் காலங்களில் இவ்வித தவறுகள் நடக்காவண்ணம் அதனை தவிர்க்கும் பொருட்டு பணி நீடிப்புக்காலம் முடிவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே உரிய கருத்துரு கீழ்காணும் உரிய சான்றுகளுடன் பிரேரணைகளை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மூலமாக உடன் அனுப்ப அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

1. ஏற்கெனவே பணி நீடிப்பு வழங்கப்பட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர் செயல் முறை ஆணை நகல்.
2. இப்பணியிடம் முதன்முதலில் தோற்றுவிக்கப்பட்ட அரசாணை நகல்
3. சரிபார்ப்புச் சீட்டு ( check Memo)

4. கருத்துரு படிவம் ( Preposition Statement)

5. நகராட்சிகளின் மூன்றாண்டு வரவு செலவு விபரங்கள்

6. உரிய நகர் மன்ற தீர்மான நகல்

7. கடந்த 3 ஆண்டுகளில் தங்கள் நகராட்சி ஊழியர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியம் 49% ( சதவிகிதத்திற்கு ) க்கு மிகாமல் உள்ளதற்கான சான்று ( உள்ளாட்சி தணிக்கைத் துறைச் சான்று)

8. அரசு, (ம) அரசு சார் நிறுவனங்களுக்கு நகராட்சி செலுத்த வேண்டிய கடன் விபரம்

இனியும் இவ்விதிகளை கையாளாமல் காலதாமதமாக செயற்குறிப்பு வரப்பெற்றால், அதற்கு பொறுப்பான நகராட்சி பணியாளர்கள் மற்றும் ஆணையர்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/-- ப. செந்தில்குமார்
**நகராட்சி நிர்வாக இயக்குநர்**

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

நகராட்சி நிர்வாக இயக்குநருக்காக

20/04/2010

பெறுநர்

அணைத்து நகராட்சி ஆணையர்கள்.

**நகல்**

1. நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை – 5 ,
2. இவ்வலுவலக அணைத்து அலுவலர்கள்,
3. இவ்வலுவலக அணைத்து கண்காணிப்பாளர்கள்,
4. அணைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்,
5. தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையம், கோயம்முத்தூர்.

H1.Note.Tamil
34 4/19/2010